# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம்: 1.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ....................................................................................................

**கவனிக்க:**

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❖ **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- ❖ **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

### பகுதி I

01. 'பங்கப் பழனத் துழுமுழவர்...' இங்கு பழனம் என்பது,
1. வயல் 2. சேறு 3. கரும்பு 4. பழம்

02. 'குன்றனைய திருநெடுந்தோள் குகன்' இங்கு குன்று என்பது,
1. பாறை 2. மணி 3. மலை 4. மறைதல்

03. 'கணக்காயரில்லாத ஊரும்' கணக்காயர் என்பதன் பொருளைத் தராத சொல்,
1. கணக்காளர் 2. ஆசிரியர் 3. ஓதுவிப்பார் 4. உபாத்தியாயர்

04. 'கணவனே கண்கண்ட தெய்வம் எனக் கண்ணகி வாழ்ந்தாள்' இங்கு கணவன் என்பதன் எதிர்ப்பாற் சொல்,
1. கணவி 2. இல்லாள் 3. பெண்டிர் 4. மனைவி

05. 'கதிகள் யாவும் தருமெனல் ஓர்ந்திடார்' இங்கு கதி என்பதன் எதிர்ப்பதம்,
1. நிர்க்கதி 2. பரகதி 3. கடுகதி 4. நற்கதி

❖ **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. Vibrater (வைபிறேற்றர்) என்பதன் தமிழ்ச் சொல்லாக அமைவது,
1. கீச்சகம் 2. அதிரி 3. நடுக்கம் 4. ஊடகம்

07. கரும்பிறை என்ற சொல் குறிப்பது,
1. மன்மதன் 2. கன்னல் 3. கடவுள் 4. பிறைநிலா

08. ஆழி, சாகரம், வேலை வாருதி என்னும் பலசொற்கள் குறிப்பது,
1. சக்கரம் 2. தொழில் 3. கடல் 4. அறிஞன்



kalvi.lk

09. மாவின் இளங்காய். வடு என்பது போல பலாவின் இளங்காய்
1. காய் 2. கச்சல் 3. பிஞ்சு 4. மூசு

10. பின்வரும் சொற்களில் வடமொழி எழுத்து அமைந்த சொல்,
1. ஆத்மா 2. சரஸ்வதி 3. இலக்குமணன் 4. இலட்சியம்

11. அரசன் தனது மந்திரி, பிரதானிகள் சூழ வீற்றிருக்கும் இடம்,
1. அரண்மனை 2. அந்தப்புரம் 3. மாளிகை 4. ஓலக்கம்

12. 'மறுகா' என்பது எப்பிரதேசக் கிளைமொழி,
1. கிழக்கு 2. வடக்கு 3. மலையகம் 3. மேற்கு

13. தனது நலனில் மட்டுமே அக்கறை கொண்டவன்,
1. உதவாக்கரை 2. சுயநலவாதி 3. ஊதாரி 4. கருமி

14. இளமைக்குரிய பிள்ளை எனும் மரபுப் பெயரைக் கொண்டிருக்கும் சொல்,
1. வேம்பு 2. பாம்பு 3. புறா 4. கீரி

15. 'நல்ல மனிதர் பிறருக்குக் கேடு நினைக்கமாட்டார்' இதில் இடம்பெற்ற 'நல்ல' என்பது,
1. பெயர்ச்சொல் 2. ஆக்கப்பெயர் 3. பெயரெச்சம் 4. பெயரடை

16. பிறகு என்பது மலையகக் கிளைமொழியில் எவ்வாறு அழைக்கப்படும்?
1. கிறுகி 2. பேந்து 3. பின்னர் 4. அப்புறம்

17. சால்வை என்பது எம் மொழிச் சொல்?
1. பாரசீகம் 2. ஒல்லாந்து 3. மராட்டி 4. போர்த்துக்கீசு

18. கழுதை மலம் விட்டை என்பது போல, யானை மலம்,
1. இலண்டம் 2. இலத்தி 3. விட்டை 4. சாணம்

19. கற்றாளையின் உள்ளீடு,
1. சுளை 2. முத்து 3. மணி 4. சோறு

20. எதிர்ச்சொற்களால் அமைந்த இணைமொழி அல்லாதது,
1. ஏற்றஇறக்கம் 2. ஆதியந்தம் 3. ஈவு இரக்கம் 4. அல்லும்பகலும்

❖ **பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருவனவற்றுள் 'ககரம்' வேறுபட்டு ஒலிக்கும் சொல்லாக அமைவது,
1. கப்பல் 2. கடல் 3. பக்கம் 4. வேகம்

22. பின்வருவனவற்றுள் பெயர்ப்பகுபதமாக அமைவது,
1. பொன்னன் 2. நடந்தனன் 3. கண்டான் 4. உண்டனன்

23. பின்வருவனவற்றுள் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாக அமைவது,
1. சால்பு 2. காப்பு 3. அமுது 4. வண்டு

24. 'குறவனும் குரங்கும் சென்றனர்'. இதில் இடம்பெற்றது,
1. திணைவழுவமைதி 2. எண்வழுவமைதி 3. பால்வழுவமைதி 4. காலவழுவமைதி


kalvi.lk

25. ‘பசியோடு இருந்தார்’ இதில் இடம்பெற்ற வேற்றுமைப்பொருள்,
1. வரையறை 2. கலப்புறு 3. உடனிகழ்ச்சி 4. அடைமொழி

26. பின்வரும் சொற்களில் ஆக்கப்பெயராக அமைவது,
1. பறிமுதல் 2. நடந்தமை 3. முதலாளி 4. வாட்டம்

27. பின்வருவனவற்றில் ஆக்கப்பெயரடையாக அமைவது,
1. இனிமையாக 2. உயர்ந்த 3. படித்த 4. எளிமையான

28. கிளிப்பேச்சு என்பது, எவ்வகைத் தொகை,
1. உம்மைத்தொகை 2. பண்புத்தொகை 3. உவமைத்தொகை 4. வினைத்தொகை

29. கெடுதல் விகாரமாக அமைவது,
1. மனவேதனை 2. கடலலை 3. கற்கிடங்கு 4. பண்ணிசை

30. ‘பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா பேசும் பொற்சித்திரமே...’ இதிலிடம்பெற்ற அணி,
1. உவமை 2. உருவகம் 3. தற்குறிப்பேற்றம் 4. உயர்வு நவிற்சி

❖ **பொருத்தமான விடையைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

31. பொன்னை உரைத்து அதன் தரத்தினை அறியப் பயன்படுவது........................ ஆகும்.
1. கருங்கல் 2. உரைகல் 3. நடுகல் 4. செங்கல்

32. வீண்செலவு செய்பவன் ....................... ஆவான்,
1. உபகாரி 2. கஞ்சன் 3. ஊதாரி 4. பேதை

33. சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு மாதாந்தம் ............................ வழங்கப்பட்டது.
1. ஓய்வூதியம் 2. சம்பளம் 3. மானியம் 4. காப்புறுதி

34. காணாமல் போன தன்மகனைக் கண்டுபிடித்துத் தருமாறு தந்தையால் ................... சமர்ப்பிக்கப்பட்டது.
1. தேடுதல் 2. முறைப்பாடு 3. கோரிக்கை 4. ஆட்கொணர்வுமனு

35. நான் வாசித்த ஒவ்வொரு புத்தகமும்,
1. சிறந்தது 2. சிறந்தவை 3. சிறந்தன 4. சிறப்பானவை

❖ **36 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்குப் பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்

36. இப் பாடலில் கவிஞர் கூறியிருப்பது,
1. கல்வியின் அவசியம் 2. பெண்கல்வி
3. பெண்விடுதலை 4. தீமையின் விளைவு

37. தலைகவிழ்தல் என்பதனால் கருதப்படுவது,
1. தலை குனிதல் 2. அவமானமடைதல் 3. தேடுதல் 4. ஓய்ந்து விடுதல்


kalvi.lk

38. இப் பாடலில் இடம்பெற்ற வினையெச்சமாக அமைவது,
1. தலை 2. மனிதர் 3. தொடுவது 4. மாய்ந்து

39. 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம்' என்பதனால் வெளிப்படுவது,
1. பெண்பாதுகாப்பு 2. பெண்ணடிமைத்தனம்
3. ஆண்களின் வீரம் 4. பெண்களின் பெறுமதி

❖ **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தி கட்டுக்கோப்பான பந்தியொன்றை அமைப்பதற்குரிய வைப்புமுறையைத் தெரிவு செய்க.**

40. அ. முதலாவது பிறமொழிகளின் அகராதி முறையைத் தமிழ்மொழியும் பெற்றமை.
ஆ. பிறமொழிக்குரிய பாதிரிமார் அகராதி முயற்சியில் ஈடுபட்டது நமது அதிஷ்டமே.
இ. தமிழில் முதன்முதலில் அகராதி முயற்சியில் ஈடுபட்டவர்கள் பாதிரியார்களே.
ஈ. அடுத்தது எல்லாச் சொற்களுக்குமே பொருள் விளக்கம் வழங்கப்பட்டமை.
உ. ஏனெனில் சில நன்மைகள் இதனால் விளைந்துள்ளன.

1. இ, ஈ, அ, உ, ஆ 2. அ, உ, ஈ, இ, ஆ 3. அ, உ, இ, ஈ, ஆ 4. இ, ஆ உ, அ, ஈ

(40 x 1 = 40 புள்ளிகள்)


kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

பகுதி-II

**01) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
‘உடரெலா முயிரிலா வெனத் தோன்றும்’

02. பின்வரும் வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
‘மழை வரும் முன்னரே விவசாயிகள் வயலை உழுதனர்’

03. கீழே தரப்படும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளை இனங்கண்டு எழுதுக.
‘அறிவுடையோர் நல்லகருத்துக்களை சொன்னாலும் அறிவற்றோர் அவற்றைக் கேட்கார்’

04. ‘பறவைகள் கூட்டமாகப் பறந்தது’ இதில் இடம்பெற்றுள்ள வழு யாது? சுருக்கமாக விளக்குக.

05. ‘ராணியை விட மேனகா கெட்டிக்காரி’ இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள சொல்லுருபு யாது?
அதன் பொருளைக் குறிப்பிடுக.

06. பேச்சுவழக்கிலுள்ள பின்வரும் தொடரை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.
‘இந்த பைல் இஞ்ச எப்பிடி வந்தது?’

07. “தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கப்பட்டது. இவ்வாக்கியத்தைப் பொருள் மயக்கமற்ற வகையில் திருத்தி எழுதுக.

08. ‘இன்சொல் பேசிப் பிறர்மனம் வெல்வோம்’ இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொகை நிலைத்தொடர்களின் வகைகளைக் குறிப்பிடுக.

9. ‘சிறுவனொருவன், பறவைக் கூட்டைத் திறக்க நாற்காலியில் ஏறினான்’ இவ் வாக்கியத்தில் இடம்பெற்ற காரணப் பெயரையும் காரண இடுகுறிப் பெயரையும் குறிப்பிடுக.

10. ‘யூதாஸ் இயேசுவின் கூடவே இருந்தானாயினும் அவரைக் காட்டிக் கொடுத்தான்’ இவ் வாக்கியத்தில் இடம்பெற்ற தனிவாக்கியங்களை எழுதுக.

(10x2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

i. நாட்டில் முன்னெப்போதும் இல்லாதவாறு போதைப்பொருள் பாவனையின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இது இளைஞர்களோடு வளர்ந்தோரிடத்தில் மட்டுமன்றி தற்காலத்தில் சிறுவர்களிடத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. எதிர்காலச் சமூகம் போதைக்கு அடிமையான சமூகமாக மாறி விடுமோ எனும் அச்சம் எல்லோரிடத்திலும் ஏற்பட்டு வருகின்றது. போதைப்பொருள் பாவனை தொடர்பில் மக்களிடத்தே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அமைந்த விளக்கக் கட்டுரை.

ii. இயற்கை வளங்கள் நிறைந்திருந்த இந்த உலகில் தற்போது அவை மனித செயற்பாடுகளால் பெரிதும் பாதிப்புக்கும் அழிவுக்கும் உட்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டு வருகின்றது. இயற்கை வளங்களைப் பேணிப்பாதுகாத்தல் தொடர்பில் பல்வேறு தொண்டு நிறுவனங்களாலும் சமூக ஆர்வலர் களாலும் காலத்திற்குக் காலம் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனவே, இயற்கை வளங்களைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பொதுசன நூலகக் கூட்டம் ஒன்றில் நீங்கள் நிகழ்த்தும் மேடைப்பேச்சு.

iii. மக்களின் வாழ்வில் பின்னிப் பிணைந்தனவாக தற்காலத்தில் தொழினுட்ப சாதனங்கள் பெருகியுள்ளன. பல்வேறு தொழில்துறைகளிலும் இவற்றின் பயன்பாடு அத்தியாவசியமானதாக மாறிவிட்டது. இவற்றால் மனிதர்களின் செயற்றிறன் குறைவடைந்து விட்டது என ஒருசாரார் கருதுகின்றனர். நவீன தொழினுட்ப சாதனங்களின் வரவு நன்மை எனக் கருதும் ஒருவருக்கும் அதனை மறுதலிக்கும் இன்னொருவருக்கு மிடையிலேயான ஒரு உரையாடல்.

iv. கமலன் சுறுசுறுப்பான ஒரு சிறுவன். அவனால் ஒரு பொழுதும் ஓய்வாக இருக்க முடியாது. ஆனால் அவனது நண்பன் சுகுணனோ இவனுக்கு நேர்மாறானவன். எப்படியோ இருவருக்குமிடையே ஒரு நட்பு உருவாகிவிட்டது. எவ்வளவோ தடவை தன்னோடு சுகுணனையும் இணைத்துக்கொள்ள, கமலன் எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்தன. இந்நிலையில் பாடசாலையில் எல்லோர் முன்னிலையிலும் சுகுணனது சோம்பேறித்தனம் உண்டாக்கிய பாதிப்பு வெளிப்படுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஒன்று உருவானது. நல்ல நட்பினால் எதையும் நல்லதாக மாற்ற முடியும் எனும் கருப்பொருளில் அமைந்த சிறுகதை.

(25 புள்ளிகள்)

**03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 50 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பது முதுமொழி. நம் முன்னோர் அனுபவரீதியாக அறிந்துகொண்ட உண்மை இது. இன்றைய உலகில் தனிமனிதனாக எவரும் வாழ்ந்துவிட முடியாது. மனிதர்கள் தம் தேவைகளைப் பெறுவதற்காக ஒருவரை ஒருவர் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது. ஒன்றுகூடி வாழ்வதே உயர்ந்த வாழ்வாகும். இதனையே 'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு' என்ற பழமொழியும் நமக்கு உணர்த்தி நிற்கின்றது. இவ்வாறு வாழக் கூட்டுறவு மனப்பான்மை அடிப்படையானது ஆகும். பலர் சேர்ந்து உழைப்பதும் பகிர்ந்து உண்பதும் கூட்டுறவாகும். பலர் ஒருங்கு கூடி பொருளிலும் உழைப்பிலும் பங்கேற்றுத் தம்மை உயர்த்திக் கொள்வதுடன், தாம் வாழும் சமுதாயத்திற்கு நன்மை செய்யக் கருவியாய்த் திகழ்வது கூட்டுறவு அமைப்பாகும். கூட்டுறவு முறைமை முறையாகப் பின்பற்றப்பட்டால் நாட்டில் தொழிலும் பொருளாதாரமும் சிறப்படையும். அதுவே நாட்டுயர்வுக்கும் வழிவகுக்கும்.

மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதற்கும் உற்பத்தியான பொருட்களை நல்ல விலையில் விற்பதற்கும் தரமான பொருட்களை நியாயமான விலையில் மக்கள் வாங்குவதற்கும் கூட்டுறவே பயன்படுகின்றது. எல்லாத்துறைகளிலும் கூட்டுறவுமுறைமையால் நன்மையே விளையும்.

(10 புள்ளிகள்)

**04. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இளைஞர்கள் உடலோம்பல் மீது பெருங்கவனம் செலுத்துதல் வேண்டும். உலக இன்பங்களை அனுபவிப்பதற்காக இறைவனால் வழங்கப்பட்ட பெருங்கொடை இந்த உடலாகும். இதனை இளமையிலேயே வளப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு பேணாது விடுவோமாயின், இவ்வுலக வாழ்வை இழந்து துன்பமடைய வேண்டி ஏற்படும். உடல்வளம் பெறாத ஒருவன் வேறு எச்செல்வத்தைப் பெற்றிருந்தாலும் என்ன பயன்?

உடலாரோக்கியமற்றவர்களிடம் அழகு தங்காது. அழகு என்பது நிறத்தில், மயிர் நீவலில், மூக்குக் கண்ணாடியில், பட்டுடையில், பிற அணிகளில் அமைந்திருப்பதல்ல. மூளை, இதயம், நுரையீரல் போன்ற உறுப்புகள் சீராகச் செயற்படுவதால் அமைவதே அழகாகும். உடலை ஓம்பவும், அழகுறச் செய்யவும் உடற்பயிற்சிகள் அவசியமானவை. எல்லோருக்கும் இலகுவானது நடைப்பயிற்சியாகும். நடப்பதால் உடற்பயிற்சியும், காற்றிடை மூழ்குதலும் நிகழ்கின்றன. உடற்சுகத்துக்கு உணவு முறைகளும் அவசிய மானவையாகும். வேளை நேரமின்றிச் சாப்பிடுவதை நிறுத்துதல் நல்லது. பசியில்லாத போது எக் காரணத்துக்காகவும் உணவுட்கொள்ளக் கூடாது. அதுபோல மீதூண் கொள்தலும் ஆபத்தாகும். இது நோய்க்கும் அகால மரணத்துக்கும் அடிகோலும்.

1. அழகு என்பதற்கு ஆசிரியர் தரும் விளக்கம் யாது?
2. நடத்தலால் ஏற்படும் நன்மைகள் யாவை?
3. உணவுட்கொள்வதில் கவனிக்க வேண்டிய இரண்டு அம்சங்கள் எவை?
4. உடலோம்புவதற்குப் பிரதானமாகச் செய்ய வேண்டியவை இரண்டினைக் குறிப்பிடுக.
5. பின்வருவனவற்றின் பொருள் தருக.
 - உடலோம்பல்
 - மீதூண்

(5 x 2 = 10 புள்ளிகள்)

**05.** மழைக்காலம் ஆரம்பமாவுள்ள நிலையில் உமது பிரதேசத்தின் பிரதான வீதிகள் உட்பட ஒழுங்கைகள் யாவும் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. உமது கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக உம்மைக் கருதிக்கொண்டு, கிராமத்தின் நிலையைத் தெளிவுபடுத்தி, இதற்கான தீர்வைப் பெற்றுத் தருமாறு மாவட்டச் செயலாளருக்கு ஒரு கடிதம்.

அல்லது

அண்மையில் உமது பாடசாலையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழா பற்றி மாணவர் மன்றத்தில் வாசிப்பதற்காக மாணவர் மன்றச் செயலாளர் என்ற வகையில் எழுதும் ஒரு அறிக்கை.

(15 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

பகுதி - III

**கவனிக்க:**

- **அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**
- **1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**
- **இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

01. சுருக்கமான விடை தருக.

i. 'பண்டே பழகி யிருந்தாலும் அறியார் புல்லர் நல்லோரை....'
அ. இவ்வரிகளால் புலவர் கூறமுற்பட்டது யாது?
ஆ. இங்கு 'புல்லர்' எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?

ii. 'கணக்காயரில்லாத ஊரும்...'
அ. இவ்வரிகள் இடம்பெற்ற இலக்கியம் எது?
ஆ. இதனைப் பாடிய புலவர் யார்?

iii. 'சென்னைச் சர்வகலாசாலையார் நடாத்திய பீ.ஏ. பரீட்சையில் யாழ்ப்பாணத்தவர் இருவர் சித்தியடைந்தனர்....'
அ. பீ.ஏ. பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இருவரும் யாவர்?
ஆ. சர்வகலாசாலை என்று குறிப்பிடப்படுவது யாது?

iv. 'கதிகள் யாவும் தருமெனல் ஓர்ந்திடார் கண்ணிலாதவர் போலத் திகைப்பர் காண்'
அ. 'ஓர்ந்திடார்' என்ற சொல்லின் பொருள் யாது?
ஆ. இவ்வரியில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

v. 'கழியும் பிழைபொருள் தள்ளி நன்னூலாம் கடலினுண்டு'
அ. நன்னூலாம் கடல் என்பது எவ்வகை அணி?
ஆ. இவ்வாறு தொடங்கும் பாடலைப் பாடிய புலவர் யார்?

vi. 'எனக்கு ஒண்டும் தெரியாது. நான் என்ரை டைரக்டரியில தேடிக்கொண்டே வந்தேன். இது வந்திருக்கு. இது உங்கடையதா?'
அ. இக்கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?
ஆ. இவ்வாறு கிடைத்ததாகக் கூறப்படுவது யாது?



kalvi.lk

vii. 'தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்'

அ. 'தேர்க்கால், பரிக்கால்' என்பவற்றால் குறிப்பிடப்படுபவை எவை?

ஆ. இவ்வரிகளில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

viii. 'வளர்ந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை நாவூறு வாராமல் காரும் ஐயனாரே....'

அ. இவ்வரிகளில் இடம்பெற்ற நம்பிக்கை யாது?

ஆ. இளந்தாரிமார் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?

ix. 'கன்றுபிரி காராவின் துயருடைய கொடி வினவக் கழல்கால் மைந்தன்...'

அ. கன்றுபிரி காராவின் துயருடைய கொடி எனக் குறிப்பிடப்பட்டவர் யார்?

ஆ. கழற்கால் மைந்தன் எனக் குறிப்பிடப்பட்டவர் யார்?

x. 'சினிமா மொழி என்றால் என்ன? இதில் மூன்று அம்சங்கள் உள்ளன.'

அ. இவ்வரிகள் இடம்பெறும் கட்டுரையை எழுதியவர் யார்?

ஆ. சினிமா மொழியின் அம்சங்களில் எவையேனும் இரண்டினை எழுதுக.

(10x2 = 20 புள்ளிகள்)

**02. பின்வரும் செய்யுட்பகுதிகளையும் உரைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

i. 'வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
ககனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழியொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே'

அ. மலைவளம் இவ்வரிகளில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

ஆ. இவ்வரிகளில் இடம்பெற்றுள்ள அணியினை விளக்குக.

ii. 'ஓர்தட்டிலே பொன்னும் ஓர்தட்டிலே நெல்லும் ஒக்க விற்கும்
கார்தட்டிய பஞ்சகாலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர்தட்டினும் தட்டு வாராமலே அன்னதானத்திற்கு
மார்தட்டியதுரை மால்சீதக்காதி வரோதயனே.'

அ. கொடிய பஞ்சகாலத்தின் தன்மை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

ஆ. வள்ளலின் கொடைத்தன்மை எவ்வாறு உயர்வுபடுத்தப்பட்டுள்ளது?

iii. 'யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்'

அ. எவ்வாறான நண்பர்களைத் தெரிவுசெய்ய வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது?

ஆ. அவ்வாறு கூறப்படுவதற்கான காரணம் யாது?



kalvi.lk

iv. பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்கின்ற 'பிறகு' அந்தச் சபையிலே நிலவியது. பேச்சுமூச்சு ஒன்றுமில்லை. மேலே கிளம்பின் பிறிற்றோ கட்சியினர் மெல்லமெல்லக் கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்து விட்டார்கள். தபால் தந்திக்கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன.

அ. இவ்வாறு குறிப்பிடப்படும் சம்பவம் யாது?
ஆ. தபால் தந்திக் கட்டுக்கள் கொண்டு வரப்பட்டமைக்கான காரணம் யாது?

v. நான் அந்தச் சம்பவத்திற்குப் பிறகு கணிப்பொறியை நிமிர்ந்தும் பார்ப்பதில்லை. அதைப் பார்த்தால் கொன்றுவிட வேண்டும் என்ற கடமை உணர்வு எனக்கு வந்துவிடும். முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டு போய்விடுவேன். அது செய்த நம்பிக்கைத் துரோகத்தை என்னால் மறக்கவே முடியாது.

அ. தன்னுடைய கடமை எதுவென்று சிறுகதையாசிரியர் கருதுகின்றார்?
ஆ. கணிப்பொறி செய்த நம்பிக்கைத் துரோகம் யாது? (5x4 = 20 புள்ளிகள்)

**03.** 'திருக்குற்றாலக் குறவஞ்சி' என்னும் பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ. திருக்குற்றால மலையின் வளம்
ஆ. பயன்படுத்தப்பட்ட அணிகள்

அல்லது

'குகப்படலம்' பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ. பரதன் கூற்றினூடாக வெளிப்படும் கோசலையின் சிறப்பு
ஆ. பரதன் என்ற பாத்திரத்தின் குணப்பண்புகள்

**04.** 'கம்பியூட்டர்' என்னும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ. கம்பியூட்டரின் வருகையின் பின்னர் வீட்டில் ஏற்பட்ட மாற்றம்
ஆ. கம்பியூட்டர் கொண்டுவந்த நன்மைகள்

அல்லது

'நாவலர் எழுந்தார்' என்ற கட்டுரையை அடிப்படையாகக்கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ. நாவலர் எழுந்தும் நடந்ததுமான தோற்ற வர்ணனை
ஆ. பிறிற்றோவின் நேர்மையற்ற தன்மை (15 புள்ளிகள்)

**05.** 'நீதிப்பாடல்கள்' என்ற பாடப்பகுதியில்
அ. வெற்றிவேற்கைப் பாடலில் உருவத்தால் சிறப்பில்லை என்பதும்
ஆ. வாக்குண்டாம் பாடலில் அடக்கமுடையார் இயல்பும் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றை விளக்குக.
(10 புள்ளிகள்)

06. 'பாரதியார் சுயசரிதை' என்ற பாடப்பகுதியில்
அ. தாம் விரும்பியதை அடையமாட்டாதவர்கள் யாவர்
ஆ. கையாளப்பட்டுள்ள அணிகளின் பொருத்தப்பாடு என்பன பற்றி விளக்குக.
(10 புள்ளிகள்)

**07.** 'நாட்டார் பாடல்கள்' என்ற பகுதியில்
அ. அரிவுவெட்டுப் பாடலில் கடவுள் மீதான நம்பிக்கை
ஆ. காதற்பாடலில் காதலனின் உறுதியான மனநிலை ஆகியன வெளிப்படுத்தப்பட்டுள்ளவாற்றை விபரிக்குக.
(10 புள்ளிகள்)


kalvi.lk

kalvi.lk

Follow and Get papers Daily ..!

எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page